நெஞ்சுக்கு நீதி தரும் நம்பிக்கை!

■ நீரை.மகேந்திரன்

முத்தமிழறிஞர் கலைஞரை நெருங்கி வாசிக்கத் தொடங்கும் ஒரு மாணவனாக, கலைஞரின் எழுத்துகளில் எனக்கு மிக வியப்பான நூலாக ஆச்சரிய சுரங்கமாக உள்ளது 'நெஞ்சுக்கு நீதி'. ஆறு பாகங்களாக உள்ள இந்த நூலில் கிட்டத்தட்ட நான்காயிரம் பக்கங்களுக்கு மேல் தனது வாழ்க்கை வரலாற்றின் பல மேடுபள்ளங்களைத் தன் வாசகர்களுக்கு நெருக்கமாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார் கலைஞர்.

தன் வரலாற்றை எழுதுவதில் எழுத்துச் செறிவும், காலத்தை நிலைநிறுத்தும் ஆளுமையும் ஒருங்கே கொண்டுள்ள எழுத்துகளாக கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' பக்கங்களைச் சொல்லலாம்.

தமிழ்நாட்டின் கடந்த அறுபது எழுபது ஆண்டுகால வரலாற்றையும், அவரது சொந்த வாழ்க்கையின் 90 ஆண்டுகளையும், திராவிட இயக்க அரசியலையும் திரும்பிப் பார்ப்பதற்கு மிகப்பெரிய ஆவணமாக உள்ளன அந்த எழுத்துகள்.

தன் வரலாறு எழுதாத தலைவர்கள்

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் குறித்து, நமக்குக் கிடைக்கக்கூடிய வரலாறுகள் பிறர் சொல்லக் கேட்டு, பிறர் எழுதியவற்றைப் பிரதி எடுத்த தகவல்கள் கைமாறி கைமாறி உருகிய பனிக்கட்டியாகவோ, ஊதி அடைக்கப்பட்ட பலூனாகவோதான் நம் கைகளில் இப்போது வாசிக்கக் கிடைக்கின்றன.

தனக்குப் பிறகு தன் காலம் குறித்து, மக்கள் மத்தியில் என்னவாகப் பதிவு செய்யப்படும் என்பது குறித்த ஆர்வத்தைக் கொண்டிராததன் விளைவு இது எனலாம் . குறிப்பாக, பெருந்தலைவர் காமராஜர் காலத்தை நாம் அறிந்துகொள்வதற்கு முழுமுற்றாக இதுதான் ஆவணம் என்கிற நூலை சுட்ட முடியவில்லை.

பெரியார் காலத்தை அவரது அரசியல் களப்பணிகள் மூலம், நாம் ஒரு வடிவத்துக்குப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றினைத் தொகுத்து வைத்துள்ளோம். பெரியாரின் காலத்தை அவர் எழுதியதை விட, அந்த உழைப்பிலிருந்து மற்றவர்கள் உருவாக்கியவை அதிகம். ஆனால், பெரியாரின் மாணவனாக, தான் கடந்து வந்த பாதையைத் தானே எழுதிக் கொண்ட வரலாற்றா சிரியராகக் கலைஞரைப் பார்க்கலாம்.

கழகமும் அரசும் எழுத்தும்

தன் வரலாற்றை வேறு யாரோ ஏன் எழுத வேண்டும் என்பதற்கு அவர் ஒரு விளக்கம் கொடுக்கிறார்.

"உன்னை ஒருவன் இழித்துப் பேசினான்' என்று தன் நண்பனிடம் ஒரு நண்பன் கூறினான். அதைக் கேட்ட அந்த நண்பன் வியப்புற்று, ''அப்படியா இருக்காதே, என்னை அவன் இழித்துப் பேசியிருக்க மாட்டானே! நான் அவனுக்கு எந்த உதவியும் செய்யவில்லையே! பிறகு எப்படி அவன் என்னை ஏசியிருக்க முடியும்" என்று கேட்டான். இந்த உரையாடல் துணுக்கில் இந்த உலகத்தின் படமே தெரிகிறது அல்லவா?

இத்தகைய உலகில்தான் நமது வாழ்க்கைப் பந்து உருளுகிறது. அந்தப் பந்தை நாம்தான் உதைத்து விளையாட வேண்டும். யாரோ உதைப்பார்கள் என்று சோம்பலாக இருந்தால் அவர்கள் நம்மையும் சேர்த்து உதைப்பார்கள்."

தனது வாழ்க்கை வரலாற்றுச் சித்திரத்தை எழுதத் தொடங்கும்போது அதற்கான விளக்கம் அளித்துள்ளார்.

கழகப் பணி, ஆட்சி நிர்வாகப் பணி இவற்றுக்கிடையில்தான் 'நெஞ்சுக்கு நீதி' சித்திரத்தையும் எழுதத் தொடங்குகிறார்.

ஏன் எழுதுகிறார்? எழுதுவதற்கு அவருக்கு நேரம் எங்கிருந்து கிடைக்கிறது என்பதைப் பற்றி இப்படிக் கூறுகிறார்:

"மன உளைச்சல்களை, அயர்வை, சோர்வை அனைத்தையும் போக்குகின்ற அருமருந்தாக அமைந்திருப்பதே எழுத்துப்பணிதான்" என்றும், தனது ஒரு நாளில் இரவுக்கு மேல் எழுத உட்காரு வதை, "இரவு 10 மணிக்கு மேல் புகை வண்டியின் பெட்டிகளை மூடி விட்டு தூங்குவது போல ஒரு நடிப்பு. அதன் பிறகு பார்வையாளர்கள், முறையீடுகள் நிச்சயமாக இல்லை என்று நம்பலாம்" இப்படித்தான் அவருக்கு எழுதுவதற்கான நேரம் அமைகிறது.

சின்னவர்களுக்கும் வரலாறு உண்டு

அவர் முதலமைச்சராக ஆன பின்னர்தான் வாழ்க்கை வரலாற்றுத் தொடரை எழுதத் தொடங்குகிறார். ஆனாலும், அவர், "வாழ்க்கை வரலாறு எழுதுகிற அளவுக்கு நீ என்ன அவ்வளவு பெரிய மனிதனாகி விட்டாயா" எனத் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறார்.

"என் நெஞ்சே என்னைக் கேட்டது. அதற்குரிய பதிலையும் தன் கைவசம் வைத்துக் கொண்டிருந்தது. பெரிய மனிதர்களுக்குதான் வாழ்க்கையும் வரலாறும் சொந்தமா? சின்னவர் களுக்குக் கிடையாதா? என அப்போது கேள்வி கேட்டேன்" என்கிறார்.

அவர் தன்னைத்தானே சின்னவர் என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் எழுதிய அத்தனையும் நூற்றாண்டு ஆவணக் குறிப்பாகப் பயன்பட்டுக் கொண்டி ருக்கின்றன.

> "எனக்குப் பிறகும் ஏன் இப்போதும் கூட இளைஞர் சமுதாயத்திற்கு இந்த எழுத்துக்கள் பயன்படும் என்பதால், என் எழுத்துக்களைத் தொடர்கிறேன்!"

அவரது வாழ்க்கையைச் சுருக்கியோ, நீட்டியோ யாரும் திரும்ப எழுதிவிட முடியாது. 'திருவாரூர் குளத்தில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்வேன்' என்று கூறிய பத்து வயது சிறுவனைத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வர வேண்டுமெனில், அவர் எழுதி வைக்கவில்லை எனில் நமக்குக் கிடைத்திருக்காது.

திராவிட இயக்கத்திலும் கழகத்திலும் பல்வேறு போராட்டங்களின் போது சிறை சென்றவர்கள் பலர். முன்னணித் தலைவர்கள் எத்தனை நாட்கள் சிறையில் இருந்தார்கள் என்பதற்கான குறிப்புகள்கூட உறுதியான தகவல்களாகக் கிடைப்பதில்லை. ஆனால், கலைஞரின் சிறைப் போராட்டங்களும், சிறை நாட்களும் நாட்குறிப்பு களாக, நிகழ்வுக் குறிப்புகளாக நமக்குக் கிடைக் கின்றன.

சமுதாயத்துக்குப் பயன்படும் சரிதம்

கலைஞரின் சுயசரிதையை வாசிக்கும் ஒருவர் அவற்றுள், ஒரு பின்னலைப் போலச் சொந்த வாழ்க்கையும், கழக வாழ்க்கையும், ஆட்சி நிர்வாகப் பணிகளும் இழையோடுவதைக் காணலாம். சொந்த வாழ்க்கையின் ஒவ்வொரு அசாதாரணச் சூழ்நிலைகளை அவர் எந்த அளவுக்கு எதிர்கொண்டார் என்பதை அவரது எழுத்துகள் கலங்க வைக்கின்றன.

1990-க்கு முன்னர் வரை யிலான காலகட்டத்தில் கலைஞரின் வரலாற்றுக்கு அரசியல் அழகியல் (CLASSICAL) தன்மையை அறிய முடிகிறது . 90-க்குப் பிறகு அவரது தீவிரமான அனுபவத்துக்கு முன்னால், எதுவுமே இல்லாத அரசி யல்வாதிகளுடன் அரசியல் செய்ய வேண்டிய நிர்ப் பந்தம் அவருக்கு உருவா கிறது. அதனால் அவர் வரலாற்றுப் பக்கங்களில் அதிகபட்சமான அரசியல் பாடம் இடம் பெறுவதைக் காணலாம். குறிப்பாக, நாம் சமகாலத்தில் எதிர் கொள்ளும் முதிர்ச்சியற்ற அரசியல் பண்பாடுகளின் தோற்று வாய்க் காலங்களாக அவற்றைக் குறிப்பிடலாம்.

'நெஞ்சுக்கு நீதி' 6 பாகங்களும் சேர்த்து கிட்டதட்ட நான்கா யிரம் பக்கங்கள். இப்படியான ஒரு வாழ்க்கைச் சரித்திரம் எவரிடமும் கிடையாது. அவர் தன் வரலாற்றை எழுதி முடிக்கும் பொழுது கிட்டத்தட்ட 90 வயதுகளில் இருந்தார். 2013-ஆம் ஆண்டு 'நெஞ்சுக்கு நீதி' ஐந்தாம் பாகம் வெளியீடுகையில் தன் வரலாற்றை எழுதுவதற்கான அடிப்படைக் காரணமாகச் சொன்னது "எனக்குப் பிறகும் ஏன் இப்போதும் கூட இளைஞர் சமுதாயத்திற்கு இந்த எழுத்துக்கள் பயன்படும் என்பதால், என் எழுத்துக்களைத் தொடர்கிறேன்" என்றார். 'நெஞ்சுக்கு நீதி'யை வாசிப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ளலாம் என்கிற அந்த நம்பிக்கை நிச்சயம் துளிர்க்கும்.

திராவிட இயக்க இதழ்கள் - 'தென்றல்'

கவியரசர் கண்ண தாசனை ஆசிரியராகக் கொண்டு 1954-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் 'தென்றல்' எனும் வார இதழ் வெளிவந்தது.

கவியரசர் திராவிட இயக்க ஆதரவாளராக இருந்த காலத்தில் வெளிவந்த இந்த இதழில் நாத்திகம், அரசியல் சார்ந்த படைப்புகள் வெளியாகியுள்ளன. மரபுக் கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த இது, தொடர்ச்சியாக வெண்பாப் போட்டிகளை நடத்தியது. அதில் கவிதை எழுதியவர்கள் பிற்காலத்தில் புகழ்பெற்ற கவிஞர்களாக விளங்கினர்.

கண்ணதாசன், பாரதிதாசன், தாம்பரம் எத்திராசன் ஆகியோர் இதழை மேற்பார்வையிட்டு நடத்தினர். 1955-ஆம் ஆண்டு மே 14 தேதியிட்ட இதழில் அவர்கள் மூவரும் வந்து இதழ்ப் பணியினைச் செய்ததற்கான புகைப்படம் வெளியாகியுள்ளது.

பாரதிதாசன், எஸ்.எஸ். தென்னரசு ஆகியோரின் படைப்புகளைத் தாங்கி வந்த இந்த இதழ், திராவிட முன்னேற்றக் கழக இதழாகவே அடையாளம் காணப்பட்டது. இதழின் தொடக்கக் காலத்திலேயே சுமார் 20 ஆயிரம் பிரதிகள் வரை விற்பனை யாகி உள்ளதாகத் தகவல் இருக்கிறது. பொங்கல் சிறப்பு மலர்களையும் இது வெளியிட்டுள்ளது.

:ப்ளாஷ்பேக்

இராஜேந்திரன்

ஓய்வுநேரத்திலும் உழைப்பு!

நான் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறேன். 2002- ஆம் ஆண்டு தலைவர் கலைஞர், அவரது மகள் மு.க.செல்வி அவர்களின் இல்லத்துக்கு வருகை தந்திருந்தார். அவர்கள் வீட்டில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் எனக்குத் தெரிந்தவர்கள் என்பதால், அவர்களின் உதவியுடன் தலைவர் கலைஞரை நேரில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். என்னைப் பற்றியும், குடும்பத்தார் பற்றியும் கேட்டறிந்தார். ஓய்வெடுக்க வந்த இடத்தில்கூட அவர் ஓய்வெடுக்காமல் உழைத்த விதம், எங்களை எல்லாம் கவர்ந்தது.

-எம்.இராஜேந்திரன், கிருஷ்ணகிரி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

கருவூலம்

எதிர்ப்புக்குப் பிறகே திருமணம்!

1948 செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் கலைஞருக்கு திருவாரூரில் திருமணம் நடைபெற்றது. அப்போதெல்லாம் அந்த நாள்தான் அண்ணா பிறந்தநாள் என்று யாருக்கும் தெரியாது. அன்றுதான் இந்தியை எதிர்த்து, நாடெங்கும் உள்ள பள்ளிகளின் முன்னே ஒரு நாள் 'அடையாள மறியல்' நடை பெற வேண்டும் என்று பெரியார் அறிக்கை விட்டிருந்தார். கலைஞரின் திருமணத் துக்கு நாள் குறித்து அழைப்பிதழ்களெல் லாம் அச்சான பிறகுதான், பெரியாரின் அறிக்கை வந்தது. இந்தித் திணிப்பு எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்துகொண்ட பின்னர் தான் கலைஞர் திருமணப் பந்தலுக்குத் திரும்பினார்.

திராவிடத்தால் வாழ்கிறோம் 320

எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131